சேர்ந்து இருக்கிறது என்கிற தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. அந்தக் குழு செயல்படவேண்டுமானால் புகையிலை மீது போடப்படும் செஸ் வரி மீண்டும் கொண்டு வரவேண்டும் என்கிற முறையில் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

Drinking Water Supply to Alandur area from river Palaru

*Q. No. 620.— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state.

(a) whether it is proposed to augment the Drinking Water Supply for the Alandur Assembly Constituency and by bringing water from Palaru; and

(b) If so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பாலாற்றுப்படுகையில் பழைய சீவரத்துக்கும், வாலாஜாபாத்துக்கும் அருகில் உள்ள இரண்டு நிலையங்களிலிருந்து நீர் எடுத்து ஆலந்தூர், பல்லாவரம் மற்றும் வழியிலுள்ள ஊர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குத்தாலம் ஒன்றியத்திலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி.

***வினா எண் 621.— திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் மோட்டார்கள் அனைத்தும் பழுதாகி பல மாதங்களாகியும் இதுவரை பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் பொது மக்களுக்கு குடிநீர் கிடைக்க மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 22 மின்இறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இவற்றில் 15 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நன்றாக இயங்கி வருகின்றன. மீதமுள்ள 7 மின் இறைப்பான்களில் பழுதுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை கூடிய விரைவில் இயங்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த குத்தாலம் ஒன்றியத்தில் இருக்கிற மேல் நிலை தொட்டிகளிலே

ஏழு இயங்கவில்லை என்று சொன்னார்கள். எல்லாத் தொட்டிகளையும் பழுதுபார்க்கும் வேலையை குடிநீர் வடிகால் வாரியம் எடுத்திருக்கிறதா? குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பராமரிப்பில் வராத தொட்டிகளும் அங்கே இருக்கின்றனவா? அந்த 7 நீர்த் தேக்கத் தொட்டிகளையும் இந்த வறட்சிக் காலத்தில் பழுது பார்க்கவில்லை என்றால் வேறு எப்போது பழுதுபார்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அவை கூடியவிரைவில் இயங்கும் என்று சொல்லியிருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உலக வங்கி உதவியுடன் நடைபெறும் நீர்ப்பாசன திட்டங்கள்.

*வினா எண் 622.—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவி பெற்று பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டங்கள் எத்தனை, தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன? அவை யாவை?

(ஆ) உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் என எந்தெந்த பாசனத் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன?

(இ) கன்னியாகுமரி மாவட்ட பாசனத் திட்டங்கள் உலக வங்கி உதவிக்கென ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனவா? அதன் மீது அரசு எடுத்த முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :— (அ) தற்போது உலக வங்கி உதவி பெற்று தமிழ்நாட்டில் பெரியாறு—வைகைப் பாசனத் திட்டம் ஒன்று தான் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்துதல், கீழ் பவானித் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல், கோதையாறு பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துதல், காவிரி டெல்டா சீரமைப்பு செய்தல் ஆகிய நான்கு திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோதையாறு பாசனத் திட்டம் முழுவதையும் நவீனப்படுத்தும் திட்டம்